நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தோட்டக்கலை கல்லூரி மாணவர்கள் ஆய்வு**

First Published : 05 Sep 2010 01:03:21 PM IST

போடி, செப். 4: விவசாயப் பயிர்களில் நோய்கள் குறித்து போடி பகுதியில் தோட்டக்கலை கல்லூரி மாணவர்கள் ஆய்வு செய்தனர்.

பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மாணவர்கள், கிராம தங்கல் திட்டத்தின் கீழ் போடியை அடுத்த சில்லமரத்துப்பட்டி கிராமத்தில் விவசாயப் பயிர்கள் குறித்து ஆய்வு செய்தனர்.

மாணவர்கள் ரமேஷ், தியாகு, வசந்தகுமார், விஜயகுமார், ஜெகன் ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

தோட்டக்கலை உதவி இயக்குனர் கெர்சோன் தங்கராஜ், கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் தவமணி, பிரபு ஆகியோர் மாணவர்களுக்கு வழிகாட்டினர்.

இதில் விவசாயப் பயிர்களின் சாகுபடி முறைகள், பயிர்களில் ஏற்படும் நோய் மற்றும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறைகள், நீர்ப்பாசன முறைகள், சந்தைப்படுத்துதல் மற்றும் பருவநிலை மாற்றங்கள் குறித்து ஆய்வு செய்தனர்.

கிராம நிர்வாக அலுவலர் பன்னீர்செல்வத்தை சந்தித்து கிராம மண்ணின் தன்மை, நீர்ப்பாசன முறைகள், கிராமத்தில் முக்கிய பயிர்கள் சாகுபடி குறித்து கேட்டறிந்தனர்.

இக்கிராமத்தில் நடைபெற்று வரும் பட்டுப்பூச்சி வளர்ப்பு முறை, ஊடுபயிர் பயிரிடுதல், விவசாயத்தில் புதிய தொழில்நுட்ப முறைகள், சொட்டு நீர்ப்பாசனம், துல்லிய பண்ணைத் திட்டம், இயற்கை விவசாயத்தில் முன்னேற்றம் அடைவதற்கான முறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு மாணவர்கள் செயல்விளக்கம் செய்து காட்டினர்.

**சம்பா நெல் நாற்று விட விவசாயிகளுக்கு வேளாண் துறை வேண்டுகோள்**

First Published : 05 Sep 2010 11:13:36 AM IST

சங்ககிரி, செப். 4: மேட்டூர் அணையிலிருந்து கிழக்கு கரை வாய்க்கால் மூலம் பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, சங்ககிரி வட்டம், தேவூர் சரகத்தை சேர்ந்த பாசனப் பகுதி விவசாயிகள் சம்பா நெல் நாற்றுவிடலாம் என வேளாண் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

÷இது குறித்து சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் ப.செþந்தரராஜன் கூறியது:

÷வாய்க்கால் பாசனப் பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் தேவூர் துணை வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் ஏற்கனவே தேவையான வெள்ளைப் பொன்னி நெல் சான்று விதைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தற்போது இப்பருவத்திற்கு நாற்றுவிட ஏதுவான ரகங்களான ஆடுதுறை 45, 39, ஐ.ஆர். 20, ஆகிய ரகங்கள் போதுமான அளவு தேவூர் துணை வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டு, விநியோகம் செய்யப்படுகிறது.

÷கடந்த ஆண்டில் இப்பருவத்தில் சாகுபடி செய்யப்பட்ட ஆந்திரா பொன்னி என்றழைக்கப்படும் பிபிடி 5024 ரகம் புகையான் தாக்குதலால் கடும் பாதிப்பு அடைந்தால், இப்பருவத்தில் ஆந்திரா பொன்னி ரகத்தை விவசாயிகள் நடவு செய்ய வேண்டாம் என வேளாண்மைத் துறை மூலம் ஏற்கனவே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

÷2011 ஜனவரி வரை மட்டுமே பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படுவதால் விவசாயிகள் தாமதிக்காமல் தேவையான சான்று பெற்ற விதைகளை வாங்கி உடனடியாக செம்மை நெல் சாகுபடி முறையில் நாற்றுவிடும் பணியை தொடங்கவும்.

÷ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டம், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் ஆகிய மானியத்திட்டங்களின் மூலம் செயல் விளக்கத் திடல்கள் அமைக்க வழங்கப்பட்டு வரும் இடுபொருட்களை பயன்படுத்தி செம்மை நெல் சாகுபடி திடல்கள் அமைக்க வேண்டும். விதை கிராமத் திட்டம் மூலம் 50 சதவீத மானிய விலையில் விதைகள் பெற்று பயனடையலாம்.

தினமலர்

**தோட்டக் கலை பயிர்களை மத்திய அரசு ஊரக இயக்குனர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2010,03:25 IST

வாலாஜாபாத்: ஊத்துக்காடு கிராமத்தில் அரசு மகளிர் திட்டப் பணிகளை மத்திய அரசு ஊரக இயக்குனர் ஆய்வு செய்தார். வாலாஜாபாத் அடுத்த ஊத்துக்காடு கிராமத்தில் தமிழக அரசு மற்றும் மத்திய அரசு நிதியுதவியின் கீழ் பல்வேறு திட்டப் பணிகள் நடந்து வருகின்றன. குறிப்பாக மகளிர் திட்டத்தின் கீழ், கீரை வகைகளை பயிரிட்டு வருகின்றனர். அவற்றை நேரில் ஆய்வு செய்வதற்காக மத்திய அரசின் ஊரக வளர்ச்சி இயக்குனர் ஜெகதீஸ் சிங் நேற்று முன்தினம் காலை 12 மணிக்கு ஊத்துக்காடு கிராமத்திற்கு சென்றார். அன்னை தெரசா மகளிர் சுய உதவிக்குழு மூலம் செயல்படுத்தப்படும் தோட்டக்கலை பயிர்களான அரைக்கீரையை

பார்வையிட்டார். அதை பயிரிட்ட விவசாயிகளிடம், தோட்டக்கலை பயிர்களை விளைவிக்க எவ்வகையான தொழில்நுட்பம் கையாளப்படுகிறது, இதன் மூலம் எவ்வளவு லாபம் கிடைக்கிறது. இவை எப்படி விற்பனை செய்யப்படுகிறது என்ற விவரத்தை கேட்டறிந்தார். வாலாஜாபாத் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சம்பத், நடராஜன் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செம்மை நெல் சாகுபடியில் அதிக லாபம் : வேளாண்உதவி இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2010,21:00 IST

விருத்தாசலம் : நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் நடப்பு சம்பா பருவத்தில் செம்மை நெல் சாகுபடி முறையில் பயிரிட்டால் கூடுதல் மகசூல் பெறலாம் என வேளாண்மை உதவி இயக் குனர் ஹரிதாஸ் தெரிவித் துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: நடப்பு சம்பா பருவத் தில் நெல் சாகுபடி செய் யும் விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி முறையில் பயிரிட்டால் கூடுதல் மகசூல் பெற்று அதிக லாபம் பெறலாம். செம்மை நெல் சாகுபடி செய்ய ஏக்கருக்கு 3 கிலோ விதை நெல் போதுமானது. 40 சதுர மீட்டர் இடம் கொண்டு பாய் நாற்றங்கால் அமைத் திட வேண்டும். 14 நாள் வயதுடைய 4 அல்லது 5 இலை கொண்ட நாற்றினை ஒற்றை நாற்று கொண்டு நடவு செய்ய வேண்டும்.

மார்க்கர் கருவி கொண்டு 22.5 செ.மி., - 22.5 செ.மீ., இடைவெளியில் நடவு செய்ய வேண் டும். 15 நாள் கழித்து கோனோவீடர் கருவி கொண்டு 10 நாள் இடைவெளியில் நான்கு முறை களைகளை சேற்றில் அமுக்கி விட வேண்டும். காய்ச்சலும், பாய்ச்சலும் முறையில் வயலில் சிறு வெடிப்பு ஏற்பட்டதும் தண்ணீர் பாயச்ச வேண்டும்.

இலை வண்ண அட்டை கொண்டு தேவைக்கேற்ப தழைச் சத்து இடவேண் டும். மேற்கண்ட தொழில் நுட்பங்களை பயன்படுத்தி பயிர் செய்தால் நல்ல மகசூல் அதிக லாபம் கிடைக் கும். செம்மை நெல் சாகுபடி செய்ய வெளாண் துறை அதிகாரிகளை விவசாயிகள் தொடர்பு கொள் ளலாம்.

மேலும் சம்பா பருவத்தில் விருத்தாசலம் வட்டாரத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் ஏக்கருக்கு பிரிமியமாக ரூபாய் 386ஐ வரைவோலையாக செலுத்தி வர்ஷ பீமா மழை காப்பீடு திட்டத் தில் ரூபாய் 6000க்கு காப் பீடு செய்து பயனடையலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**திருந்திய நெல் சாகுபடி விழிப்புணர்வு கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2010,23:58 IST

புவனகிரி : புவனகிரி அடுத்த வண்டுராயண்பட்டு கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது. சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண்புல இறுதியாண்டு மாணவிகள் புவனகிரி அடுத்த வண்டுராயண்பட்டு கிராம விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தினர். ஊராட்சி தலைவர் ராமச்சந்திரன் தலைமை தாங்கினார்.
மாவட்ட கல்வி அலுவலர்(ஓய்வு) கலியமூர்த்தி, அண்ணாமலை பல்கலைக்கழக விரிவாக்கத்துறை இணை பேராசிரியர் ஜெயசீலன் முன்னிலை வகித்தனர். முதுநிலை விரிவுரையாளர் ஜெயா துவக்கவுரை ஆற்றினார். இணைப் பேராசிரியர்கள் அறிவுடைநம்பி, தமிழ்செல்வி திருந்திய நெல் சாகுபடி குறித்தும், விவசாயத்தில் அதிக மகசூல் பெற நவீன முறைகளை கையாளும் விதம் குறித்து பேசினர்.

**மீன் வளர்ப்பு செயல் விளக்கம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2010,21:12 IST

சிதம்பரம் : சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண் மாணவர்கள் விவசாயிகளுக்கு நெல் சாகுபடி முறைகள், கோழி மற்றும் மீன் வளர்ப்பு குறித்து செயல் விளக்கமளித்தனர்.
சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண் மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் கடவாச்சேரியில் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர். விவசாயிகளுக்கு நெல் சாகுபடி முறைகள், கோழி மற்றும் மீன் வளர்ப்பு குறித்து செயல் விளக்கமளித்தனர். ஊராட்சித் தலைவர் மோகன்ராஜ் முன்னிலையில் நடந்த முகாமில் அப்பகுதி விவசாயிகள் பங்கேற்றனர். முகாம் ஏற்பாடுகளை மாணவத் தலைவர் செல்வமுத்து தலைமையிலான குழுவினர் செய்திருந்தனர்.

**குறைந்த முதலீட்டில் விவசாயிகளுக்கு அதிக லாபம்! காய்கறி சாகுபடியில் சாதிக்க முடியும்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2010,20:41 IST

தியாகதுருகம் : காய்கறிகளை பயிரிட்டு குறைந்த முதலீட்டில் அதிக லாபம் ஈட்ட முடியும் என் பதை விவசாயிகள் நிரூபித்து வருகின்றனர். மலைப்பகுதியில் சாகுபடி செய்யப்படும் காய்கறிகளை பயிரிட்டு லாபம் பெறமுடியுமா என்ற சோதனை முயற்சியிலும் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

ரிஷிவந்தியத்தை சேர்ந்த வேணுராஜ்(48) என்பவர் தனது நிலத்தில் பாகற்காய், பீர்க்கன், புடலை, கத்திரி, மிளகாய் போன்ற காய்கறிகளை பயிரிட் டுள்ளார். இதற்காக 25 சென்ட் நிலத்தில் மூங்கில் கழிகளை நட்டு கம்பியால் அமைக்கப் பட்ட பந்தலில் கொடிகள் நன்கு படர்ந்து செழித்து வளர்ந் துள்ளன.

நிலத்தை நன்கு உழுது வீரிய ரக விதைகளை 4,000 ரூபாய் செலவில் பயிரிட்டுள்ளார். கொடிகள் படருவதற்காக 8,000 ரூபாய் செலவில் பந்தல் அமைத் துள்ளார். விதைத்து 70 நாட்களில் பூக்கத் துவங்கி தற்போது கொத்து கொத்தாக காய்கள் காய்த்து தொங்குகிறது. பந்தலில் படர்ந்துள்ள பீர்க்கன், பாகற்காய், புடலங்காய் பெரிய அளவில் காய்த்துள்ளது.

இச்செடிகளுக்கு இடையே ஊடுபயிராக சோதனை முயற்சியாக பீட்ரூட் பயிரிட்டுள்ளார். குளிர்பாங்கான மலைப்பகுதியில் மட்டுமே பீட்ரூட் நன்கு வளர்ந்து நல்ல பலன் தரும் நிலையில் இதனை இப்பகுதியில் பயிரிட்டு அதன் விளைவு திறனை சோதிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார். எதிர் பார்த்த பலன் கிடைத்தால் அதிக பரப்பில் பீட்ரூட் சாகுபடி செய்யவும் முடிவு செய்துள்ளார்.

இவரது நிலத்தில் விளையும் காய்கறிகளை வாரத்திற்கு நான்கு நாட்கள் அறுவடை செய்து ரிஷிவந்தியத்தை சுற்றியுள்ள ஊர்களில் நடக்கும் வாரச் சந்தைகளுக்கு எடுத்து சென்று விற்பனை செய்து லாபம் பெறுகிறார்.

இதுகுறித்து விவசாயி வேணுராஜ் கூறியதாவது: காய்கறி பயிரிடுவதில் பல ஆண்டுகளாக எனக்கு ஆர்வம் உள்ளது. தற்போது 25 சென்ட் பரப்பில் பந்தல் அமைத்து கொடியில் காய்க்கும் காய்கறிகளை பயிரிட்டுள்ளேன். இத்துடன் கத்திரி, மிளகாய் பயிர்களையும் சாகுபடி செய்துள்ளேன். வாரம் தோறும் 160 கிலோ காய்கறிகளை அறுவடை செய்கிறேன். இதற்காக மூன்று கூலியாட்களை மட்டுமே பணியில் ஈடுபடுத்துகிறேன்.

காய்கறிகளை மொத்தமாக விற்பனை செய்தால் மார்க்கெட் விலையில் பாதிக்குதான் விற்க முடிகிறது. இதனால் ரிஷிவந்தியம், தியாகதுருகம், செட்டித் தாங்கல், எறையூர் ஆகிய ஊர்களில் நடக்கும் வார சந்தைகளுக்கு எடுத்து சென்று கடை வைத்து நானே நேரிடையாக விற்பனை செய்வதால் இரட் டிப்பு லாபம் கிடைக்கிறது.

வாரம் 4,000 ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது. இதற்காக 12 ஆயிரம் ரூபாய் மட்டுமே செலவிட்டுள்ளேன். காலையில் அறுவடை செய்த காய்கறிகளை மதியத்திற்குள் விற்பனையாகிவிடுகிறது. இன்னும் கூடுதல் பரப்பில் காய்கறிகளை பயிரிட திட்டமிட்டுள்ளேன். இதற்கு அரசு சார்பில் கடன் வழங்கி உதவினால் மேலும் உற்சாகமாக காய்கறி சாகுபடியில் ஈடுபடமுடியும். பாரம்பரியமான முறை பயிர்களை விடுத்து இதுபோன்ற காய்கறிகளை பயிரிடுவதால் நல்ல பலனை பெறமுடிகிறது. இவ்வாறு விவசாயி வேணுராஜ் கூறினார்.

ரிஷிவந்தியம் பகுதியில் காய்கறி சாகுபடிக்கு தகுந்த சூழலும், மண்வளமும் இருப்பதால் அரசு தோட்டக்கலை துறை அதிகாரிகள் இதுபோன்ற விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும். காய்கறி

உற்பத்தியை பெருக்குவதற்கான போதிய ஆலோசனைகளை தோட்டத்துறையினர் வழங்கினால் இவரைப்போல் சிறிய அளவில் சாகுபடி செய்துவரும் விவசாயிகள் பலரும் உற்சாகத்துடன் அதிகளவில் காய்கறி உற்பத்தியை பெருக்க முன்வருவார்கள்.

**மாவுப்பூச்சி தாக்குதலால் மரவள்ளி அழியும் அபாயம் : மூட்டைக்கு ரூ.750 வழங்க விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2010,02:56 IST

சேலம்: "விலை வீழ்ச்சி, மாவுப்பூச்சி தாக்குதல் போன்றவற்றால் மரவள்ளி கிழங்கு அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மூட்டைக்கு 750 ரூபாய் வழங்க வேண்டும்' என, தமிழக விவசாயிகள் சங்கம் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், முதல்வருக்கு அனுப்பிய கோரிக்கை மனு விபரம்: தமிழகத்தில் சேலம், நாமக்கல், ஈரோடு, கோவை, கரூர், திருச்சி, திண்டுக்கல், தேனி, மதுரை, தஞ்சை, புதுக்கோட்டை, விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, பெரம்பலூர் உள்ளிட்ட 18 மாவட்டங்களில் மரவள்ளி கிழங்கு அதிகப்படியாக சாகுபடி செய்யப்படுகிறது.

கல்வராயன்மலை, பச்சமலை, கொல்லிமலை உள்ளிட்ட மலைகளில் தற்போது அறுவடை நடந்து வருகிறது. கடந்த ஆண்டு இதேவேளையில் மூட்டைக்கு 750 ரூபாய் வரை கிடைத்தது. அதேபோல் ஸ்டார்ச் மூட்டை 3,000 ரூபாய், ஜவ்வரிசி மூட்டை 5,000 ரூபாய் என விலை கிடைத்து வந்தது.

தாய்லாந்தில் இருந்து மூன்று லட்சம் மூட்டை ஜவ்வரிசி இறக்குமதி செய்யப்பட்டு வந்த நிலையில், கள்ளிபூச்சி நோய் தாக்குதலால் அங்கு மரவள்ளி உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது. அதன் காரணமாக விலையும் கடுமையாக அதிகரித்துள்ளது. தமிழகத்திலும் விலை உயர்ந்திருக்க வேண்டும். ஆனால், மரவள்ளி விலையோ மூட்டைக்கு 350 ரூபாய் குறைவாக வீழ்ச்சியடைந்துள்ளது. ஸ்டார்ச் மூட்டைக்கு 2,000 ரூபாய், ஜவ்வரிசி மூட்டைக்கு 3,000 ரூபாய் என குறைந்துள்ளது.

ஒரு பக்கம் மரவள்ளி மகசூல் குறைவு, இன்னொரு பக்கம் மழை இல்லாதது, புரோக்கர்களின் தில்லு முல்லு, பாய்ன்ட் பார்ப்பதிலும், எடை போடுவதிலும் மோசடி நடக்கிறது. அதையும் தாண்டிவந்தால் ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசிக்கு விலையில்லை என மரவள்ளி கொள்முதல் தடுக்கப்படுகிறது.

சிறு, குறு, நடுத்தர ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்களை கேட்டால், சேலம், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பெரும் ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி ஆலை உரிமையாளர்களும்,

வியாபாரிகளும் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள ஜவ்வரிசி, ஸ்டார்ச் விலையை குறைத்து வருகிறார்கள் என்கின்றனர்.
மாவுப்பூச்சி நோய் பரவி வருவதால் விவசாயிகளும் கவலையடைந்துள்ளனர். விலை பிரச்னை ஒருபுறம், நோய் தாக்குதல் மறுபுறம் என்றிருந்தால் விவசாயிகள், ஸ்டார்ச், ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவர். மரவள்ளி விவசாயத்தை பாதுகாக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
மலைப்பகுதி கிழங்குகள் 90 சதவீதம் அறுவடையாகியும், தரைபகுதி கிழங்குகள் இன்னும் ஓரிரு மாதங்களில் அறுவடைக்கு வர உள்ளது. சென்ற ஆண்டு கிடைத்த விலைக்கு குறையாமல் அதாவது மூட்டைக்கு 750 ரூபாய்க்கு குறையாமல் கொள்முதல் விலை கிடைக்க வேண்டும். ஆண்டுதோறும் மத்திய அரசு மரவள்ளிக்கு உரிய விலை நிர்ணயம் செய்ய வேண்டும், பரவி வரும் மாவுப்பூச்சி நோய் தாக்குதலை கட்டுப்படுத்த வேண்டும். இடைத்தரகர்களின் கொள்ளையை தடுக்க வேண்டும். அரசு சார்பாக வாகன ஏற்பாடு, பாயின்ட் மிஷின் மற்றும் எடைமேடை அமைத்து தர வேண்டும். சேலம் சேகோசர்வ் மூலம் மட்டுமே ஜவ்வரிசி விற்பனையை உறுதிப்படுத்த வேண்டும். ஆலை அதிபர்கள், வியாபாரிகள் வரி செலுத்தாமல் செய்யும் ஜவ்வரிசி வர்த்தகத்தை தடை செய்ய வேண்டும். கள்ள மார்க்கெட்டில் விற்பனை செய்பவர்கள் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளது.

## மாவுப்பூச்சி கட்டுப்படுத்துவது எப்படி?

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2010,02:54 IST

வாழப்பாடி: மரவள்ளியை தாக்கும் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்துவதற்கான எளிய வழிமுறைகளை, ஏத்தாப்பூரில் செயல்பட்டு வரும் கோவை வேளாண் பல்கலை மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி மையம் விவசாயிகளுக்கு தெரிவித்துள்ளது. ஏத்தாப்பூர் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி மைய தலைவர் டாக்டர் பழனிசாமி மற்றும் பேராசிரியர்கள் செல்வராணி, கலைச்செல்வி, வெங்கடேசன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை: சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ஏறக்குறைய 4,800 ஹெக்டேர் பரப்பளவில் மரவள்ளி பயிரிடப்பட்டுள்ளது. மரவள்ளியில் மாவுப்பூச்சி தாக்குதல் தீவிரமடைந்துள்ளது. அதனால் மரவள்ளி மகசூல் பாதிக்கும் என விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். மரவள்ளி மட்டுமின்றி பல்வேறு பயிர்களை தாக்கும் தன்மை கொண்ட மாவுப்பூச்சிகள், காற்று, கால்நடைகள், விதைக்குச்சிகள், பண்ணைக்கருவிகள், பறவைகள் மற்றும் எறும்புகள் வாயிலாக பரவக்கூடியதாகும். மாவுப்பூச்சிகள், இலைக்காம்பு, இலைகள், கணு இடைப்பகுதி மற்றும் காய் போன்ற பகுதிகளில் சாற்றை உறிஞ்சுவதால், தண்டு

சிறுத்து செடியின் வளர்ச்சி குன்றுவதோடு இலைகள் பழுத்து மஞ்சள் நிறமாகி உதிர்ந்து விடும். மாவுப்பூச்சிகள் சுரக்கும் பிசுபிசுப்பான தேன் போன்ற திரவத்தின் மேல் "கேப்னோடியம்' என்ற கரும் பூஞ்சாணம் தோன்றுவதால், தாவரத்தின் ஒளிசேர்க்கை பாதித்து, செடிகள் குட்டையாவதோடு மகசூலும் குறையும். அசுர வேகத்தில் பரவும் தன்மை கொண்ட மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த விவசாயிகள் கீழ்கண்ட வழிமுறைகளை பின்பற்றினால் நல்ல பலன் கிடைக்கும்.

மாவுப்பூச்சியால் தாக்கப்பட்ட வயல்களில் ஆரம்ப கட்டத்தில் வயலின் ஓரத்தில் செடிகள் பாதிக்கப்பட்டிருந்தால், வயலின் உட்புறத்தில் இருந்து வெளிப்புறம் நோக்கி கைத்தெளிப்பானை கொண்டு தண்ணீரை இரண்டு அல்லது மூன்று முறை தெளித்தாலே கட்டுப்படுத்த முடியும். சேதம் குறைவாக இருந்தால், இயற்கை பூச்சிக்கொல்லியான வேப்பெண்ணெய் 2 சதம் அல்லது வேப்பங்கொட்டை பருப்புச்சாறு 5 சதம் கலந்து, மாவுப்பூச்சி தாக்குதலுக்குட்பட்ட செடிகள் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் தெளிக்கலாம். மீன் எண்ணெய், ரோசின் சோப்பு 25 கிராம் ஆகியவற்றை கலந்து 15 முதல் 20 நாட்களுக்கு ஒருமுறை தெளிக்கலாம். சேதம் அதிகமாக இருந்தால், புரோபினோஸ் 50 இ.சி., அசிபேட்75 டபுள்யு.பி., டைமெதோயேட் 36 டபுள்.எஸ்.சி., ஆகிய பூச்சி கொல்லியில் ஏதேனும் ஒன்றை லிட்டருக்கு 2 மி.லி., கலந்து தெளிக்கலாம் அல்லது ஒரு லிட்டருக்கு குளோர்பைரிபாஸ் 20 இ.சி., 5 மில்லி, இமிடாகுளோபிரிட்17.8 எஸ்.எல்., 0.6 மி.லி., தயோ மீத்தாக்சம் 25 டபுள்யூ. ஜி., 0.6 கிராம் கலந்து தெளித்தால் மாவுப்பூச்சியை எளிதாக கட்டுப்படுத்த முடியும்.

ஒரே பூச்சிக்கொல்லியை திரும்ப திரும்ப பயன்படுத்தாமல் சுழற்சி முறையில் வெவ்வேறு பூச்சிக்கொல்லிகளை தேவைக்கேற்ப பயன்படுத்துவது நல்லது. பல பூச்சிக்கொல்லிகளை ஒன்றாக கலந்து தெளிக்க கூடாது. மாவுப்பூச்சியால் பாதிக்கப்பட்ட செடிகள் நன்றாக நனையும்படி கைத்தெளிப்பானை கொண்டு காலை அல்லது மாலை வேளையில் பூச்சிக்கொல்லியை தெளிக்க வேண்டும். மாவுப்பூச்சியைக் கட்டுப்படுத்த அனைத்து விவசாயிகளின் கூட்டு முயற்சி அத்தியாவசியமாகும். விவசாயிகள் மேலும் விபரங்களை ஏத்தாப்பூரில் செயல்பட்டு வரும் கோவை வேளாண் பல்கலை மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி மையத்தை நேரிலோ அல்லது 04282-293526 என்ற தொலைபேசியிலோ கேட்டு தெரிந்து கொள்ளலாம். அவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சூரியகாந்தியை அறுவடை செய்ததும் விற்பனை : விவசாயிகளுக்கு வேளாண் துறை ஆலோசனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2010,00:53 IST

தர்மபுரி: "சூரிய காந்தி விலை நவம்பர் மாதத்தில் குறைய வாய்ப்புள்ளதால், அறுவடை செய்ததும் விற்பனை செய்ய வேண்டும்' என, தர்மபுரி மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் நாகராஜ் விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: சூரிய காந்தி உலகம் முழுவதும் பயன்படுத்தப்படும் முக்கிய உணவு எண்ணெய். வனஸ்பதி, சோப்புகள் மற்றும் வாசனை திரவங்கள் தயாரிக்கவும் சூரியகாந்தி எண்ணெய் பயன்படுகிறது. சூரியகாந்தியின் புண்ணாக்கு 40-44 உயர் ரக புரத சத்தை உள்ளடக்கியது. இதனால் கோழிவளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பிலும் வெகுவாக பயன்படுத்தப்படுகிறது. உலக அளவில் தாவர எண்ணெய் நுகர்வில் ரஷ்யா, உக்ரேன், அமெரிக்கா, அர்ஜெண்டினா, சீனா, இந்தியா ஆகிய நாடுகள் எட்டு சதவீதம் இடம்பெறுகிறது. உலகில் சூரியகாந்தி 25.02 மில்லியன் ஹெக்டேரில் பயிரிடப்படுகிறது. மொத்த உற்பத்தி 35.24 மில்லியன் டன். இந்தியாவில் உலக உற்பத்தியில் 8.19 சதவீதம் சூரியாகாந்தி உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்தியாவில் 2008-09ம் ஆண்டில் சூரியகாந்தி 1.83 மில்லியன் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு 1.25 மில்லியன் டன் உற்பத்தி செய்யப்பட்டது. கர்நாடகாவில் 46.46 சதவீதமும், ஆந்திராவில் 31.31 சதவீதமும், மஹராஷ்டிராவில் 14 சதவீதமும், தமிழகத்தில் 1.02 சதவீதமும் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழகத்தில் சூரியகாந்தி 0.26 லட்சம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு 0.48 லட்சம் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. ஈரோடு, தர்மபுரி, திண்டுக்கல், கரூர், திருச்சி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் 82 சதவீதம் சூரியகாந்தி உற்பத்தி செய்யப்படுகிறது. பொதுவாக சூரியகாந்தி பயிர்கள் அக்டோபர் முதல் நவம்பர் வரையும், ஏப்ரல் முதல் மே வரையும் பயிரிடப்படுகிறது. சந்தைகளுக்கு மார்ச், மே, ஜூன் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் அதிகமாக விற்பனைக்கு வரு கிறது.

தமிழகத்தில் வெள்ளக்கோவில், மூலனூர் மற்றும் கொடுமுடி ஆகிய இடங்களில் சூரியகாந்திக்கு முக்கிய விற்பனை சந்தைகள் உள்ளன. 2009-10ம் ஆண்டில் பாமாயில் 6.95 மில்லியன் டன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் அதிகப்படியாக இறக்குமதி செய்யப்படும் பாமாயிலினால் சூரியகாந்தி விலை குறையுமா என்ற சந்தை நிலவரம் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது. அதனால், அறுவடை செய்த சூரியகாந்தியை உடனடியாக விற்பனை செய்வதா அல்லது சேமித்து வைத்து விற்பனை செய்வதா என குழம்பி போய் உள்ளனர். கடந்த பத்து ஆண்டுகளாக சூரியகாந்தி சந்தை விலையை தமிழ்நாடு வேளாண் பல்கலையில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாடு ஆய்வு மையம் ஆய்வு செய்து வருகிறது. ஆய்வு முடிவுகளின் படி செப்டம்பர், அக்டோபர் வரை சூரியகாந்தி விலை கிலோவுக்கு 23-26 ரூபாய் வரை கிடைத்து வருகிறது. உயர்ரக விதைகளுக்கு 30 ரூபாய் வரை கிடைக்க வாய்ப்புள்ளது.

நவம்பர் மாதத்தில் விலை குறைய வாய்ப்பு உள்ளது. எனவே, ஆய்வு முடிவுகளின் படி பார்க்கும்பட்சத்தில் விவசாயிகள் சூரியகாந்தி விதையை அறுவடை செய்ததும் விற்பனை செய்து விடுவது நல்லது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**கரும்பு அறுவடை இயந்திரம் வாங்க அரசு ரூ. 39 கோடி ஒதுக்கீடு : அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தகவல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2010,00:33 IST

கோவை : ""தமிழகத்திலுள்ள 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு 32 கரும்பு இயந்திரம் வாங்குவதற்கு அரசு 39 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது,'' என வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தெரிவித்தார்.
சத்தியமங்கலம் அருகே ஆலத்து கோம்பை பண்ணாரி அம்மன் சர்க்கரை ஆலையில் புதிதாக வாங்கப்பட்ட முழுக்கரும்பு அறுவடை இயந்திரம் செயல்விளக்கம் மற்றும் அறிமுக விழா நேற்று சர்க்கரை ஆலை வளாகத்தில் நடந்தது. பண்ணாரி அம்மன் சுகர்ஸ் நிறுவன தலைவர் பாலசுப்ரமணியம் தலைமை வகித்தார். கோவை வேளாண் பல்கலை துணை வேந்தர் முருகேசபூபதி, சத்தியமங்கலம் எம்.எல்.ஏ., தர்மலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் இயந்திரத்தை அறிமுகப்படுத்தி பேசியதாவது: தமிழகத்தில் கடந்தாண்டு பயிர் சாகுபடி 50.35 லட்சம் ஹெக்டேராக இருந்தது. அடுத்த ஐந்தாண்டுகளுக்கு 60.51 லட்சம் ஹெக்டேராக உயர்த்த அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. கரும்பு உற்பத்தி திறன் ஒரு ஹெக்டேருக்கு 110 லட்சம் டன் உற்பத்தியிலிருந்து 130 லட்சம் டன் மெட்ரிக் டன் ஆக கூட்டுவதற்கு திட்டம் உள்ளது.
கரும்பு உற்பத்தியை பொறுத்தமட்டில் அறுவடைக்கு ஆட்கள் குறைவாக இருந்தாலும், ஒரு டன்னுக்கு 400 ரூபாய் கூலி பெறுகின்றனர். கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் கூலி, உற்பத்தி செலவு என அவர்களுக்கு சரியான லாபம் கிடைப்பதில்லை. எனவே, முழு கரும்பு அறுவடை இயந்திரம் வாங்குவதற்கு அரசு குழு தாய்லாந்து, ஜப்பான் நாடுகளுக்கு சென்றது. சீனாவிலிருந்து பெறப்பட்ட முழு கரும்பு அறுவடை செய்யும் இயந்திரத்தின் மூலம் ஒரு மணிக்கு அரை ஏக்கர் நிலப்பரப்பிலுள்ள கரும்பை அறுவடை செய்யமுடியும். இயந்திரத்தின் விலை ஒரு கோடியே 39 லட்சம் ரூபாய் ஆகிறது. மேலும் இயந்திரத்தின் மூலம் செய்யப்படும் அறுவடைக்கான கூலி 200 ரூபாய் மட்டுமே ஆகிறது. எனவே தமிழகத்திலுள்ள 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு இரண்டு வீதம் 32 இயந்திரங்கள் வாங்க 39 கோடி ரூபாய் நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

உரத்தட்டுபாடு கடந்த 2006 துவக்கத்திலிருந்தது. ஆனால் தற் போது எவ்வகையான உரமும் தட்டுப்பாடு இன்றி கிடைக்கிறது. உரத்தில் கலப்படம் என்ற குற்றசாட்டுக்கு, யாரோ செய்யும் தவறு அரசை கட்டுப்படுத்தாது. தவறை சுட்டிக்காட்டினால் அரசு கடும் நடவடிக்கை எடுக்க தவறாது. இவ்வாறு அமைச்சர் வீரபாண்டி பேசினார்.

ப்யூச்சரா -2010 நிறைவு விழா: பண்ணாரி அம்மன் தொழில்நுட்ப கல்லூரி சார்பில் கடந்த மூன்று நாட்கள் நடந்த தேசிய கருத்தரங்கம் மற்றும் அறிவியல் தொழில்நுட்ப கண்காட்சி நேற்று மாலையில் நடந்தது. பண்ணாரி அம்மன் தொழில்நுட்ப கல்லூரி இயக்குனர் சுந்தரராமன் வரவேற்றார். கல்லூரி சேர்மன் பாலசுப்ரமணியம் தலைமை வகித்தார்.

சத்தியமங்கலம் எம்.எல்.ஏ., கோவை வேளாண் பல்கலை துணை வேந்தர் முருகேச பூபதி முன்னிலை வகித்தனர். வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் பேசினார். கல்லூரி முதன்மை நிர்வாகி நடராஜன் வரவேற்றார். கல்லூரி முதல்வர் சண்முகம் நன்றிகூறினார்.

**தித்தித்தது திராட்சை விளைச்சலும், விலையும் அமோகம் : "எட்டாக்கனி'யானது நகர மக்களுக்கு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2010,22:56 IST

பேரூர் : பருவமழையின் தாக்கம் குறைவாக இருந்ததால், திராட்சை சாகுபடி விவசாயிகளுக்கு தித்திப்பாக இருந்தது. திராட்சைக்கு நல்ல விலையும் கிடைத்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் திராட்சை விவசாயிகளுக்கு ஏதாவது ஒரு சோதனை ஏற்படும். விளைச்சல் இருந்தால் விலை இருக்காது. விலை இருந்தால் விளைச்சல் இருக்காது. பூச்சி தாக்கும்; மழையில் சேதமடையும். இப்படி பல சோதனைகளை ஒவ்வொரு ஆண்டும் சாந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். ஆனால், இந்த முறை, அத்தி பூத்தாற்போல் திராட்சை விவசாயம் சரியாக அமைந்தது.

தொண்டாமுத்தூர் அருகே, ஆறுமுகக்கவுண்டனூர், தீத்திபாளையம், மாதம்பட்டி, செல்லப்பகவுண்டன்புதூர், கரடிமடை, பூலுவபட்டி, தீனம்பாளையம் ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் திராட்சை பயிரிடப்படுகிறது. ஜூன், ஜூலை, அக்டோபர், நவம்பர் மாதங்களில் பெய்த மழையால் திராட்சைகள் அழுகி வீணாகியதோடு, அறுவடைப் பணிகள் பாதிக்கப்பட்டது.

பழங்களில் காய்சாம்பல், கருஞ்செவட்டை நோய்கள் தாக்கியது. இதனால், திராட்சை பயிரிட்ட பூமியின் ஈரப்பதத்தால், 65% திராட்சை உற்பத்தி பாதிக்கப்பட்டது. வழக்கமாக, கோவை மார்க்கெட், கேரளா பகுதிகளுக்கு கொண்டு செல்லும் திராட்சை பழங்களின் எண்ணிக்கை 30 டன்னிலிருந்து, 15 டன்னுக்கும் கீழ் குறைந்தது.

அழுகியதெனக்கூறி அறுவடை பழங்கள் திருப்பி அனுப்பினர். எப்போதும் பருவமழை சீசனில், மழையின் தாக்கத்தால் திராட்சை உற்பத்தி பாதிக்கப்பட்டு, நஷ்டம் ஏற்படுவது இயல்பு. இந்தாண்டு எதிர்பார்த்த அளவு பருவமழை பெய்யவில்லை. சில மாதங்களாக, பருவமழையின் தாக்கம் குறைந்து வெயில் அடித்தது. திராட்சை விளைச்சல் நன்றாக இருந்ததோடு, விலையும் கிடைத்துள்ளது. வழக்கமாக, பருவமழை சீசனில் மார்கெட்டுக்கு கொண்டு செல்லப்படும், பழங்களின் எண்ணிக்கையை காட்டிலும் கூடுதலாக உள்ளது. நாளொன்றுக்கு, 25 டன் முதல் அதிகபட்சமாக 35 டன்வரை திராட்சை பழங்கள் கோவை, கேரளா பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

பழத்துக்கு, கூடுதல் விலை கிடைத்துள்ளதால் திராட்சை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். 1985-2000ம் ஆண்டுவரை, இப்பகுதியில், 2,000 ஏக்கருக்கு மேல் திராட்சை சாகுபடி இருந்தது. தினமும், 75 டன் முதல் 95 டன்வரை திராட்சை பழங்கள் உற்பத்தியானது. தற்போது இந்த விவசாயம் பாதியாக குறைந்துள்ளது.

திராட்சை பயிருக்கு முதலீடு அதிகம் என்பதால், பல விவசாயிகள் பயிரிட முடியவில்லை. ஒரு ஏக்கருக்கு கல்கால், கம்பி, பந்தல், கொடிமர நடவு, ஆள்கூலி என , மூன்று லட்சத்துக்கு மேல் செலவுசெய்து, பயிர்செய்ய முடியாத நிலைக்கு பெரும்பாலான விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். திராட்சை சாகுபடி தொழில்நுட்ப ஆலோசகர் மாணிக்கம் கூறுகையில், தற்போது அறுவடை கட்டத்தை எட்டியுள்ள திராட்சை பயிர்களுக்கு, பூச்சி மற்றும் நோய்தாக்குதலிருந்து போதுமான பயிர்பாதுகாப்பு முறையை சீரிய முறையில் செய்தால் கூடுதல் மகசூலை விவசாயிகள் பெறலாம். பறவை, வவ்வால்கள், தேனீக்கள் போன்றவையின் தாக்குதலில் இருந்து, திராட்சை பழங்களை பாதுாக்க "மேற்புறவலை' அமைத்தால் மிகவும் நல்லது. திராட்சை சாகுபடியை விரிவுபடுத்த வங்கி கடனுதவியும் தந்தால், அனுபவமிக்க விவசாயிகளைக் கொண்டு, இன்றைய தொழில்நுட்பத்தோடு, திராட்சை சாகுபடியை, "மீண்டும்' பல ஏக்கருக்கு விரிவுபடுத்தலாம்,"என்றார்.

பருவமழை காலங்களான, ஜூன், ஜூலை, செப்டம்பர், அக்டோபர், நவம்பர் போன்ற மாதங்களில், கடந்த ஆண்டுகளில், ஒரு கிலோ திராட்சையின் விலை ரூ. 8க்கு விற்பனையானது. அதிகபட்சமாக ரூ. 15ஐ தாண்டவில்லை. ஆறு கிலோ கொண்ட திராட்சை பெட்டி ரூ. 42 முதல் ரூ. 50 வரை மட்டுமே விற்பனையானது.

தற்போது, ஒரு கிலோ திராட்சையின் விலை ரூ. 38 முதல், ரூ. 40 வரையும், ஆறு கிலோ கொண்ட திராட்சை பெட்டி ரூ. 210 முதல் ரூ. 220 வரைக்கும் விற்பனையாகிறது. எதிர்பார்த்த விலைக்கும் மேல் கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நகர மக்கள் விலை கொடுத்து வாங்க முடியாமல் தவிக்கின்றனர்.

**மஞ்சள்சோளம் பயிரிட விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2010,22:35 IST

திருப்பூர் : திருப்பூர் பகுதி விவசாயிகள், தீவனத்துக்காக மஞ்சள் சோளம் அதிகமாக பயிரிடுகின்றனர்.

திருப்பூர் நகரம் தொழில் துறையை சார்ந்திருந்தாலும், புறநகர் பகுதிகள் விவசாயம் சார்ந்தவையாகவே உள்ளன. விவசாயிகள், பயிர் செய்வது மட்டுமின்றி, வேளாண் சார்புடைய மாடு வளர்ப்பையும் செய்து வருகின்றனர். மாடு வளர்ப்பவர்கள், தீவனத்துக்காக தீவனப்பயிர் செய்கின்றனர். புண்ணாக்கு, தவிடு, பருத்தி கொட்டை விலை உயர்வை சமாளிக்கவும், பால் உற்பத்தி செலவை கணிசமாக குறைக்கவும் உதவுகிறது. தினமும் கறவை மாடுகளுக்கு பச்சை தீவனம் அளித்து, பால் உற்பத்தியை அதிகரிக்க முடிகிறது.

காய்கறி உள்ளிட்ட பணப்பயிர்களை விட, தீவனப்பயிர்களுக்கு விவசாயிகள் இடையே அதிக முக்கியத்துவம் காணப்படுகிறது. ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக பயிர் செய்கின்றனர். மஞ்சள்சோளம், மக்காசோளம் கோ1, கோ2, கம்புநேத்தியர், குதிரைமசால் உள்ளிட்ட தீவன பயிர் செய்கின்றனர்.

திருப்பூர் சுற்றுப்பகுதிகளில் மஞ்சள் சோளம் அதிகமாக பயிரிடப்படுகிறது. மற்றப்பயிர்களை விட, வறட்சியை தாங்குதல்; குறைவான இடத்தில் அதிகளவு பயிர் செய்தல்; மற்ற பயிர்களை விட, அதிக வளர்ச்சி; பச்சை பயிரை முழுமையாக மாடுகள் உணவாக எடுத்துக் கொள்தல்; முழுமையான வளர்ச்சி அடைந்து மீதம் ஏற்பட்டால், அறுவடை செய்து பயன்படுத்துதல்; ஒருமுறை அறுவடை செய்தபின், அதன் வேரில் மீண்டும் பயிர் வளருதல் என மஞ்சள் சோள பயிர் அதிக பயனை தருகிறது.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2010,04:02 IST

கொட்டாம்பட்டி:கொட்டாம்பட்டி ஊராட்சி அலுவலகத்தில், விவசாயிகளுக்கான பயிற்சி நடந்தது. ஆத்மா திட்டத்தின் கீழ் நடந்த பயிற்சிக்கு, ஒன்றியத் தலைவர் திலகராஜ் தலைமை ஏற்றார். வேளாண் உதவி இயக்குனர் செல்வப்பாண்டி, தோட்டக்கலை அலுவலர் செல்வராஜ் முன்னிலை வகித்தனர். இரண்டு நாட்கள் நடந்த பயிற்சியில் கொட்டாம்பட்டி ஒன்றியத்திற்குட்பட்ட 27 ஊராட்சிகளைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். வேளாண் அலுவலர் ரவி, துணை வேளாண் அலுவலர் ஆதீஸ்வரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் வெங்கடாசலபதி, ரவிச்சந்திரன், பாலதிருப்பதி, பிரபு ஆகியோர் செய்திருந்தனர்.

**எண்ணெய் பனைவிவசாயிகள் பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2010,04:28 IST

ஆழ்வார்குறிச்சி:கடையம் வட்டாரத்தில் எண்ணெய் பனை விவசாயிகள் பயிற்சி நடந்தது.கடையம் வட்டாரம் பாப்பான்குளம் கிராமத்தில் ஐசோபாம் எண்ணெய்ப்பனை 2010-11ம் ஆண்டிற்கான விவசாயிகள் பயிற்சி நடந்தது. நெல்லை வேளாண்மை இணை இயக்குநர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார். பயிற்சியை கடையம் யூனியன் சேர்மன் செல்வி சங்குகிருஷ்ணன் துவக்கி வைத்து பேசினார். பாப்பான்குளம் பஞ்.,தலைவர் வேலம்மாள் சிறப்புரையாற்றினார். திருச்சி வானொலி முன்னாள் அலுவலர் சுப்பிரமணியன் விவசாயிகளுக்கு பயிற்சியளித்தார்.

பயிற்சியில் கடையம் வட்டாரத்தை சார்ந்த 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று எண்ணெய்ப்பனை சாகுபடி தொழில் நுட்பத்தினை மிக தெளிவாக தெரிந்து கொண்டனர். மேலும் ஏ.பி.நாடானூரில் எண்ணெய்ப்பனை சாகுபடி செய்த பயிரினை நேரிடையாக கண்டு, விவசாயிகளுடன் நேரடி விவாதம் செய்து தொழில் நுட்பத்தை தெரிந்து கொண்டனர்.பயிற்சியில் நெல்லை வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய அரசு திட்டம்) தேவசகாயம், வேளாண்மை துணை இயக்குநர் (மாநில அரசு திட்டம்) துரைப்பாண்டியன், உழவர் பயிற்சி மைய வேளாண்மை துணை இயக்குநர் அழகர்சாமி, வேளாண்மை துணை இயக்குநர் வைத்திலிங்கம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.கடையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர் கூறினார்.

தினத் தந்தி

**கடந்த ஆறு வர்த்தக தினங்களில் உரத் துறை நிறுவனப் பங்குகளின் விலை 11 சதவீதம் வரை அதிகரிப்பு**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

மும்பை

ஆகஸ்டு 27–ந் தேதி முதல் செப்டம்பர் 3–ந் தேதி வரையிலான ஆறு வர்த்தக தினங்களில், மும்பை பங்குச் சந்தையில், உரத் துறையைச் சேர்ந்த நிறுவனப் பங்குகளின் விலை 11 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

வேளாண் உற்பத்தி

நாட்டின் பல பகுதிகளில் நல்ல மழை பெய்து வருகிறது. எனவே வேளாண் உற்பத்தி அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. இதனையடுத்து உரங்கள் விற்பனை அதிகரித்து, உர நிறுவனங்கள் ஈட்டும் வருவாய், நிகர லாபம் சிறப்பான அளவில் அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே இந்த நிறுவனங்களின் பங்குகளுக்கு தேவைப்பாடு உயரத் தொடங்கியுள்ளது.

நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில் நம் நாட்டில் உரங்களுக்கான தேவைப்பாடு 5 சதவீதம் உயர்ந்து 5.60 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற நிதி ஆண்டில் 5.34 கோடி டன்னாக இருந்தது. பல்வேறு உரங்களில் யூரியாவிற்கான தேவை தொடர்ந்து அதிகரித்த நிலையில் உள்ளது. இதனால் உரத் துறை நிறுவனங்களின் வர்த்தகம் அமோக வளர்ச்சி அடையும் நிலை உருவாகியுள்ளது.

நிறுவனப் பங்குகள்

டாட்டா குழுமத்தின் ஓர் அங்கமான டாட்டா கெமிக்கல்ஸ் நிறுவனம், உரங்கள் மற்றும் பல்வேறு ரசாயனப் பொருள்கள் தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறது. மும்பை பங்குச் சந்தையில், சென்ற வார வர்த்தகத்தில், இந்நிறுவனப் பங்கின் விலை சுமார் 8 சதவீதம் உயர்ந்துள்ளது. அவ்வாரத்தில் இப்பங்கின் விலை, கடந்த 52 வாரங்களில் இல்லாத அளவிற்கு ரூ.414–ஆக உயர்ந்தது.

இதே காலத்தில், சம்பல் ஃபெர்டிலைசர்ஸ் நிறுவனப் பங்கின் விலை அதிகபட்சமாக 10.56 சதவீதம் அதிகரித்துள்ளது. சென்ற வாரத்தில் இப்பங்கின் விலை, கடந்த ஒரு மாதத்தில் இல்லாத அளவிற்கு, ரூ.74.15 என்ற அளவை எட்டியது. தீபக் ஃபெர்டிலைசர்ஸ் நிறுவனப் பங்கின் விலை 10 சதவீதம் உயர்ந்து, கடந்த ஓராண்டில் இல்லாத அளவிற்கு, ரூ.178–ஆக அதிகரித்தது. நேஷனல் ஃபெர்டிலைசர்ஸ் நிறுவனப் பங்கின் விலை 7.37 சதவீதமும், ராஷ்ட்ரீய கெமிக்கல்ஸ் அண்டு ஃபெர்டிலைசர்ஸ் நிறுவனப் பங்கின் விலை 7.06 சதவீதமும் உயர்ந்துள்ளது.

கணக்கீடு செய்ய எடுத்துக் கொண்ட காலத்தில், நாகார்ஜுனா ஃபெர்டிலைசர்ஸ் நிறுவனப் பங்கின் 5.68 சதவீதம் உயர்ந்துள்ளது. குஜராத் ஸ்டேட் ஃபெர்டிலைசர்ஸ் நிறுவனப் பங்கின் விலை 2.17 சதவீதம் அதிகரித்துள்ளது. விதி விலக்காக, ஜெயின் இரிகேஷன் நிறுவனப் பங்கின் விலை மட்டும், சென்ற வாரத்தில், 3 சதவீதம் குறைந்து போனது. சென்ற மாதம் 9–ந் தேதியன்று இப்பங்கின் விலை, கடந்த ஓராண்டில் இல்லாத அளவிற்கு, ரூ.1,323–ஆக உயர்ந்தது. இது, சென்ற வாரத்தில் ரூ.1,205–ஆக குறைந்தது. லாப நோக்கம் கருதி இப்பங்குகள் விற்பனை செய்யப்பட்டதே விலை குறைந்ததற்கு காரணம் என்று கூறப்படுகிறது.

உரங்கள் பயன்பாடு

விவசாயத்தை அதிகம் சார்ந்திருக்கும் நம் நாட்டில் உரங்களின் பயன்பாடு தொடர்ந்து உயர்ந்து வருகிறது. சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில், ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான 11 மாத காலத்தில் நம் நாடு 50 லட்சம் டன்னுக்கும் அதிகமான அளவில் உரங்களை இறக்குமதி செய்துள்ளது. இதன் மதிப்பு 120 கோடி டாலராகும் (சுமார் ரூ.5,600 கோடி). அதற்கு முந்தைய நிதி ஆண்டில் 240 கோடி டாலர் மதிப்பில் 57 லட்சம் டன் உரங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

நம் நாட்டில் யூரியா உரமே மிக அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில் நம் நாட்டில் யூரியாவிற்கான தேவைப்பாடு 2.66 கோடி டன்னாக இருந்தது. இது, சென்ற நிதி ஆண்டில் 2.82 கோடி டன்னாக உயர்ந்தது. சென்ற நிதி ஆண்டில் நாட்டின் யூரியா உற்பத்தி 2.20 கோடி டன்னாக இருந்தது. இது, 12–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 3 கோடி டன்னை தாண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு கரீஃப் பருவத்தில், யூரியா பயன்பாடு, ஒட்டுமொத்த அளவில், 1.37 கோடி டன்னாக இருந்தது. இது, அதற்கு முந்தைய ஆண்டின் இதே பருவத்தில் 1.20 கோடி டன்னாக இருந்தது. இந்நிலையில் நடப்பு 2010–11 கரீஃப் மற்றும் ரபி பருவங்களுக்கான உரத் தேவை மிகவும் உயர்ந்துள்ளது என்று மத்திய உர அமைச்சகத்தின் அதிகாரி ஒருவர் கூறினார். இந்த தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் வகையில், உற்பத்தி மற்றும் இறக்குமதியை உயர்த்திக் கொள்ள உர நிறுவனங்களும், அரசு அமைப்புகளும் தயாராகி வருகின்றன.

இயற்கை எரிவாயு

நடப்பு ஆண்டு கரீஃப் பருவத்தில், ஜூலை 31–ந் தேதி வரையிலான காலத்தில் யூரியா உர விற்பனை 73.59 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 68.05 லட்சம் டன்னாக இருந்தது. கடந்த 2008–ஆம் ஆண்டு கரீஃப் பருவத்திலிருந்து தற்போது வரை உரங்களின் அளிப்பு ஆண்டுக்கு 10 சதவீதம் உயர்ந்துள்ளது என மத்திய உரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.


உரத் துறை நிறுவனங்களுக்கு மத்திய அரசு கூடுதல் இயற்கை எரிவாயுவை ஒதுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவனங்களுக்கு தற்போது நாள் ஒன்றுக்கு 4 கோடி கன மீட்டர் எரிவாயு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது, 5.75 கோடி கன மீட்டராக அதிகரிக்கப்படும் என தெரிகிறது. இதனால் உரத் துறை நிறுவனங்களின் செயல்திறன் மேலும் அதிகரிக்கும். இதுவும் இத்துறை நிறுவனப் பங்குகளின் மதிப்பு அதிகரித்து வருவதற்கு முக்கிய காரணமாக உள்ளது.

**ஆகஸ்டு மாதத்தில் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 38% வளர்ச்சி**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நடப்பு ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் நாட்டின் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி, சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 38 சதவீதம் அதிகரித்து 1.70 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.
அதேசமயம், ஆகஸ்டு மாதம் வரையிலான காலத்தில் இதன் ஏற்றுமதி 32.41 சதவீதம் குறைந்து 30.40 லட்சம் டன்னிலிருந்து 20.50 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது. சோயா புண்ணாக்கு கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்தப்படுகிறது.
சென்ற 2008–09–ஆம் ஆண்டு எண்ணெய் பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) ரூ.5686 கோடி மதிப்பிற்கு 32.10 லட்சம் டன் சோயா புண்ணாக்கு ஏற்றுமதியாகி உள்ளது.
இந்நிலையில், சோயாபீன் போதிய அளவிற்கு கிடைக்காததால், இதிலிருந்து சோயா எண்ணெய் தயாரிக்கும் நடவடிக்கைகள் மிகவும் குறைந்து வருகிறது. இதனையடுத்து நடப்பு 2009–10–ஆம் ஆண்டு எண்ணெய் பருவத்தில் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி, சென்ற பருவத்தைக் காட்டிலும் 30 சதவீதம் குறைந்து 23 லட்சம் டன்னாக சரிவடையும் என இந்தியா சோயாபீன் பதப்படுத்துவோர் சங்கம் தெரிவித்துள்ளது.
சோயா பீனிலிருந்து எண்ணெய் எடுத்த பிறகு சோயா புண்ணாக்கு கிடைக்கிறது.
மத்தியபிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், ஆந்திர பிரேதசம் ஆகிய மாநிலங்களில் சோயா பீன் அதிக அளவில் உற்பத்தி ஆகிறது.
நம் நாட்டிலிருந்து தென்கொரியா நாடு குறிப்பிடத்தக்க அளவு புண்ணாக்கு வகைகளை இறக்குமதி செய்து வருகிறது.

**நடப்பு ஆண்டில் இதுவரை காபி உற்பத்தி 10% அதிகரிப்பு**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நடப்பு ஆண்டில் ஜனவரி–ஆகஸ்டு மாத காலத்தில், காபி உற்பத்தி சென்ற ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 10 சதவீதம் அதிகரித்து 2.62 லட்சம் டன்னிலிருந்து 2.89 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

*3.08 லட்சம் டன்*

*எதிர்வரும் 2010–11–ஆம் பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) காபி உற்பத்தி 6 சதவீதம் அதிகரித்து 3.08 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் ரோபஸ்டா வகை காபி உற்பத்தி 2.08 லட்சம் டன்னாகவும் மற்றும் அராபிகா வகை காபி உற்பத்தி 1 லட்சம் டன்னாகவும் இருக்கும். பொருளாதார வளர்ச்சி வேகத்தில் உலக அளவில் இரண்டாவது இடத்தில் உள்ள நம் நாடு, காபி உற்பத்தியில் ஐந்தாவது மிகப் பெரிய நாடாகத் திகழ்கிறது. ஆசியாவில் மூன்றாவது இடத்தில் உள்ளது.*

*இந்நிலையில் இந்தியகாபிக்கு வெளிநாடுகளில் தேவைப்பாடு அதிகரித்து வருகிறது. சென்ற 2009–ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 1.30 லட்சம் டன்னாக இருந்த காபி ஏற்றுமதி, நடப்பு ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 57 சதவீதம் அதிகரித்து 2.05 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இதில் அராபிகா மற்றும் ரோபஸ்டா வகை காபி ஏற்றுமதி 1.74 லட்சம் டன்னாகவும் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட காபி ஏற்றுமதி 30,793 டன்னாகவும் உள்ளது.*

*ரோபஸ்டா*

*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தில் ரோபஸ்டா காபி ஏற்றுமதி 54 சதவீதம் அதிகரித்து 72,738 டன்னிலிருந்து 1,12,325 டன்னாக உயர்ந்துள்ளது. அராபிகா காபி ஏற்றுமதி 39,241 டன்னாக உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டின் இதே காலத்தில் இது, 23,507 டன்னாக இருந்தது. ஆக, அராபிகா காபி ஏற்றுமதியில் 67 சதவீதம் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. முதல் எட்டு மாதங்களில் மதிப்பு அடிப்படையில் காபி ஏற்றுமதி 48 சதவீதம் அதிகரித்து ரூ.1,400.63 கோடியிலிருந்து ரூ.2,083.50 கோடியாக உயர்ந்துள்ளது. இந்த காலத்தில் ஒரு டன் காபி சராசரியாக ரூ.1,01,548 என்ற விலையில் ஏற்றுமதியாகி உள்ளது. இந்தியாவிலிருந்து இத்தாலி, ரஷ்யா, ஜெர்மனி மற்றும் பெல்ஜியம் போன்ற நாடுகளுக்கு அதிக அளவில் காபி ஏற்றுமதி ஆகி உள்ளது.*

## ***கரும்பு சக்கையில் இருந்து மின் உற்பத்தி செய்யும் திட்டம் விரைவில் தொடங்கும் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தகவல்***



பண்ணாரி அம்மன் சர்க்கரை ஆலையில் முழு கரும்பு அறுவடை எந்திரத்தை அமைச்சர் வீர பாண்டி ஆறுமுகம் அறிமுகம் செய்து வைத்த போது எடுத்த படம். அருகில் ஆலையின் தலைவர் எஸ்.வி.பாலசுப்ரமணியம், எல்.பி.தர்மலிங்கம் எம்.எல்.ஏ. துணைவேந்தர் முருகேசபூபதி ஆகியோர் உள்ளனர்.

*கோவை, செப்.6–*

*தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் கரும்பு சக்கையில்*

இருந்து மின் உற்பத்தி செய்யும் திட்டம் விரைவில் தொடங்கும் என்று அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் கூறினார்.

அறிமுக விழா

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துக்கு முழு கரும்பு அறுவடை எந்திரத்தின் அறிமுக விழா மற்றும் செயல்விளக்கம் நிகழ்ச்சி சத்தியமங்கலம் பண்ணாரி அம்மன் சர்க்கரை ஆலை வளாகத்தில் உள்ள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பண்ணையில் நேற்று நடந்தது. விழாவிற்கு தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் தலைமை தாங்கி, புதிய கரும்பு அறுவடை இயந்திரத்தை அறிமுகப்படுத்தி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

கரும்பு சாகுபடி

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு 3 லட்சத்து 14 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டது. இதில் இருந்து 3 கோடியே 45 லட்சத்து 40 ஆயிரம் மெட்ரிக் டன் கரும்பு உற்பத்தி செய்யப்பட்டு உள்ளது. கரும்பு உற்பத்தியில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஒரு ஹெக்டேருக்கு 50 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. தமிழ்நாட்டில் கரும்பு அறுவடை செய்வதற்கு ஆட்கள் பற்றாக்குறை உள்ளது.

இதை சமாளிக்க இயந்திரம் மூலம் கரும்பு அறுவடை செய்யப்படுகிறது. ஒரு டன் கரும்பு அறுவடை செய்வதற்கு ரூ.450 கூலி கொடுக்கப்படுகிறது.

இதனால் விவசாயிகளுக்கு லாபம் இல்லாத சூழ்நிலை உருவாகி வருகிறது. இதை தவிர்க்க கடந்த 2007–ம் ஆண்டு ஜப்பானில் இருந்து இயந்திரம் வாங்கப்பட்டது. தாய்லாந்தில் இருந்து கரும்புகளை வெட்டும் இயந்திரம் வாங்கப்பட்டது. இந்த இயந்திரம் கரும்புகளை சிறிய துண்டுகளாக வெட்டும். இந்த கரும்புகளை 6 மணி நேரத்திற்குள் அரவை செய்ய வேண்டும்.

புதிய எந்திரம்

இந்த பிரச்சினையை போக்குவதற்காக தற்போது சீனாவில் இருந்து புதிய முழு கரும்பு அறுவடை எந்திரம் வாங்கப்பட்டு உள்ளது. இந்த எந்திரத்தின் மதிப்பு ரூ.1 கோடியே 41 லட்சம் ஆகும். இதன் மூலம் கரும்பை தோகை, சறுகு நீக்கி அறுவடை செய்ய முடியும். இந்த எந்திரத்தின் மூலம் கரும்பு அறுவடை செய்யும் போது ஆட்கள் பற்றாக்குறைக்கு தீர்வு கிடைக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள 17 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு இந்த புதிய கரும்பு அறுவடை எந்திரம் வாங்க ரூ.39 கோடியே 10 லட்சம் நிதியை அரசு ஒதுக்கி உள்ளது. இதை கொண்டு புதிய எந்திரங்கள் வாங்கப்பட உள்ளது.

மின் உற்பத்தி

சர்க்கரை ஆலைகளில் கரும்பு சக்கையில் இருந்து மின் உற்பத்தி செய்தால் மின்பற்றாக்குறை பிரச்சினை தீரும். இந்த திட்டம் ரூ.1,225 கோடியே 63 லட்சம் மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இந்த பணிகள் முடிவடைந்து ஒரு ஆண்டில் மின் உற்பத்தி தொடங்கும். இங்கு கரும்பு அரவை செய்யப்படாத காலங்களில் நிலக்கரி மூலம் மின் உற்பத்தியை செய்யலாம்.

இந்த மாதத்திற்கு மொத்தம் 95 ஆயிரம் மெட்ரிக் டன் யூரியா உரம் தேவை. தற்போது 82 ஆயிரத்து 146 மெட்ரிக் டன் உரம் இருப்பு உள்ளது. மீதி உள்ள உரம் 10–ந் தேதிக்குள் வந்து சேரும். டி.ஏ.பி. உரம் 50 ஆயிரம் மெட்ரிக் டன் தேவை. ஆனால் இருப்பு ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 439 மெட்ரிக் டன் உள்ளது. பொட்டாசியம் 48 ஆயிரம் மெட்ரிக் டன் உரம் தேவை. ஆனால் இருப்பாக ஒரு லட்சத்து 19 ஆயிரத்து 420 மெட்ரிக் டன் உள்ளது. காம்ப்ளக்ஸ் உரம் மொத்தம் 72 ஆயிரத்து 332 மெட்ரிக் டன் உரம் இருப்பு உள்ளது. தமிழ்நாட்டில் உரமும், விதைநெல்லும் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. போலியான உரங்களை யார் விற்றாலும் அவர்கள் மீது பாரபட்சமின்றி அரசு கடும் நடவடிக்கை எடுக்கும்.இவ்வாறு அமைச்சர் வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் கூறினார்.

*எந்திர கண்காட்சி*

*சர்க்கரை ஆலை வளாகத்தில் பல்வேறு வகையான கரும்பு அறுவடை இயந்திரங்கள், களையெடுக்கும் கருவி, மருந்து தெளிப்பான், உரங்கள் மற்றும் விவசாய கருவிகள் கண்காட்சியாக வைக்கப்பட்டு இருந்ததுஇதை அங்கு வந்து இருந்த விவசாயிகள் பார்வையிட்டனர்.*

*முன்னதாக பண்ணாரி அம்மன் சர்க்கரை ஆலையின் தலைவர் எஸ்.வி.பாலசுப்பிரமணியம் வரவேற்று பேசினார். எல்.பி.தர்மலிங்கம் எம்.எல்.ஏ., வாழ்த்துரை வழங்கினார். கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணை வேந்தர் ப.முருகேசபூபதி கருத்துரை வழங்கினார்.*

*முடிவில் விவசாயி சின்னராஜன் நன்றி கூறினார். விழாவில், நிர்வாக இயக்குனர் சரவணன் மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.*

## ***குன்னூர் ஏல மையத்தில் அனைத்து ரக தேயிலை தூளும் விலை உயர்வு***

*குன்னூர், செப்.6–*

*குன்னூர் ஏல மையத்தில் அனைத்து ரக தேயிலை தூள்களுக்கும் ரூ. 2 விலை உயர்வு ஏற்பட்டது.*

*தேயிலை ஏலம்*

*குன்னூரில், வாரந்தோறும் வியாழன், வெள்ளி இரு நாட்கள் தேயிலை ஏல மையத்தில் தேயிலை தூள் ஏலம் நடைபெற்று வருகிறது. விற்பனை எண் 35–க்கான ஏலம் கடந்த 2 மற்றும் 3–ந் தேதிகளில் நடைபெற்றது.*

*ஏலத்திற்கு மொத்தம் 12 லட்சத்து 76 ஆயிரம் கிலோ வந்தது. இதில் 8 லட்சத்து 98 ஆயிரம் கிலோ இலை ரகமாக வும், 3 லட்சத்து 78 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது. கடந்த ஏலங்களில் வந்த தேயிலை தூளின் அளவு களில் விற்பனை எண் 35–க்கான ஏலத்திற்கு வந்த தேயிலை தூளின் அளவு குறைவாக இருந்தது என்பது குறிப்பிடத் தக்கது ஆகும்.*

*விலை உயர்வு*

*வெளி நாட்டு வர்த்தகர் களை பொறுத்த வரை ரஷ்யா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஓரளவு தேயிலை தூளை வாங்கின. உள்நாட்டு வியா பாரிகள் ஏலத்தில் அதிக ஆர்வம் காட்டவில்லை.அனைத்து தேயிலை ரகங் களுக்கும் 2 ரூபாய் விலை ஏற்றம் இருந்தது. இருப்பினும் 15 சதவீத தேயிலை தூள் விற் பனையாகாமல் தேக்கம் அடைந்தது.*

*சி.டி.சி. ரகத்தின் உயர்ந்த பட்ச விலையாக 138 ரூபாயும், ஆர்தோடக்ஸ் தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலை யாக ரூ.187ஆகவும் இருந்தது. இலை ரகத்தின் சாதாரண வகை 32 ரூபாயில் இருந்து 38 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 80 ரூபாயில் இருந்து 122 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

*விலை உயர்ந்த தூள்*


*டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை ரூ.33–ல் இருந்து ரூ.43 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.90–ல் இருந்து ரூ.130 வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 36–க்கான ஏலத்திற்கு 11 லட்சத்து 89 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.*

*குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு விலை ஏற்றம் ஏற்பட்டு உள்ளதால் பச்சை தேயிலை விலை உயருமா? என்று விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.*

தமிழ் கூடல்
10 வருட சேவையில்...

**வேளான் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனுக்கு கனடா பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம்**

டொரன்டோ, செப். 4-



பிரபல வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதனுக்கு (85) கனடாவில் உள்ள அல்பெர்ட்டா பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்க உள்ளது.

தனி ஒரு மனிதனாக ஒட்டுமொத்த சமுதாய வளர்ச்சிக்கு அளித்த பங்களிப்புக்காகவும், கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக உலக உணவு பாதுகாப்புக்கான அவரது பங்களிப்பைக் கருத்தில் கொண்டும் அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட உள்ளது. வரும் அக்டோபர் 7-ம் தேதி பல்கலைக்கழகத்தில் நடைபெறும் விழாவில் "அறிவியலுக்கான கௌரவ டாக்டர் பட்டம்" என்ற விருது அவருக்கு வழங்கப்பட உள்ளது. அப்போது நீடித்த வேளாண்மை என்ற தலைப்பில் அவர் சிறப்பு சொற்பொழிவு ஆற்றுகிறார்.